
# திராவிடத்தால் வாழ்கிறோம்

840

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

110

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மும்பை வி.தேவதாசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# மும்பை வி.தேவதாசன் தமிழ் வளர்த்த கழகத் தொண்டர்!

1972-ஆம் ஆண்டு, மும்பையில் மராத்வாடா சட்டப் பல்கலைக்கழகத்துக்கு அண்ணல் அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என கழகத்தின் சார்பில், சென்னையில் இருந்து மகாராஷ்டிர அரசுக்கு தந்தி அனுப்பும் போராட்டத்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர். அதேநாளில், அந்தப் பல்கலைக்கழக வாசலில் மும்பை கழகத்தின் சார்பில், அண்ணலின் பெயரைச் சூட்டக்கோரி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அந்தக் கூட்டத்தின் முன்னணியில் நின்ற உடன்பிறப்பு வி.தேவதாசன்.

மும்பை திராவிட இயக்கத்தின் முன்னோடி, மும்பை புறநகர் தி.மு.க.வின் முதல் தலைவர், முன்னாள் அவைத்தலைவர், திருவள்ளுவர் மன்ற நிறுவனர், மும்பையில் திருவள்ளுவர் சிலை நிறுவியவர் என பல அடையாளங்களுக்குச் சொந்தமானவர் மும்பை வி.தேவதாசன். பேரறிஞர் அண்ணாவுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டலில், தமிழ்நாட்டுக்கு வெளியே மும்பையில் கழகத்தைக் கட்டி எழுப்பியவர்களில் ஒருவர்.


நெல்லை மாவட்டம், பரப்பாடி, இலங்குளம் ஊரைச் சேர்ந்தவர். நெல்லை மாவட்டத்தில், திராவிடர் கழகப் பொதுக்கூட்டங்களைக் காணச் சென்று, தந்தை பெரியார் வழி ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பெற்றோர் வியாகப்பர் - ஏசுவடியாள். 1928-ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ஆம் தேதி பிறந்தவர்.

### மும்பைக்குப் பயணம்

1951-ஆம் ஆண்டு மும்பை வந்த தேவதாசன், தொடக்க காலத்தில் (1952 -56 ) பிஷன் (BISHEN) சில்க் மில்லில் உதவியாளராகப் பணிபுரிந்தார். 1957-ஆம் ஆண்டு மும்பை துறைமுகத்தில் டெலி கிளார்க் ஆகவும், பின்னர் 1959-ஆம் ஆண்டில் மும்பை போக்குவரத்துக் கழகமான 'பெஸ்ட்' பேருந்தில் நடத்துனராகவும் பணியாற்றியவர். மும்பைக்கு வேலை தேடி வந்த காலத்திலேயே, பல்வேறு பணிகளைப் பார்த்துக்கொண்டே, மும்பை தாராவியில் கழகப் பணிகளிலும் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். அங்கு ஏற்கெனவே கழகப் பணியாற்றி வந்த பொற்கோ, இரத்தினசாமி, புத்தரசு, தியாகராசன், ஆரிய சங்கரன், நெல்லை செழியன் ஆகியோருடன் இணைந்து மும்பை தி.மு.க.-வில் பெரும்பணியாற்றினார்.

1952-இல் தமிழ் மன்றத்தைத் தொடங்கியதுடன், 1953-ஆம் ஆண்டில், தான் வசித்து வந்த பாண்டுப் பகுதியில் கழகக் கிளையை ஏற்படுத்தி, அதன் செயலாளராகப் பொறுப்பேற்றார். அப்போதே, கலைஞர், நாவலர், என்.வி.நடராசன், சத்தியவாணிமுத்து, சி.பி.சிற்றரசு, அரங்கண்ணல் ஆகியோரை அழைத்து பொதுக்கூட்டங்களை நடத்தியிருக்கிறார்.

1961-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில், தேர்தல் நிதி திரட்டுவதற்காக மும்பை, அகமதாபாத் வாழ் தமிழர்களைச் சந்திக்கச் சென்றார் பேரறிஞர் அண்ணா. அப்போது, அவரது நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்ததுடன், ஒரே நாளில் காலை 8 மணிக்குத் தொடங்கி, இரவு 11 மணி வரை அண்ணாவுடன் பயணித்து, தேர்தல் நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் தேவதாசன். தலைவர் கலைஞர் அவர்களால் மும்பை புறநகர் கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் தலைவராக நியமிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டார் தேவதாசன்.


ஓவியம் : ரவி பேலட்

### தமிழ்ப் பள்ளி

மும்பை வாழ் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாகக் கழகமும், கழகத்தினரும் இருந்ததால் தமிழர்களின் பிள்ளைகளைத் தமிழ் கற்பதற்கு, தாய்மொழியைக் கற்பதற்கு முனைப்புடன் செயல்பட்டவர் தேவதாசன். அதற்காக, தமிழ் பயிற்றுவிக்கும் பணிகளைத் தொடங்கியவர், மும்பை பாண்டுப் பகுதியில் பிரைட் பள்ளி மற்றும் ஜூனியர் கல்லூரியைத் தொடங்கி நடத்தினார். ஆங்கில வழி மட்டுமின்றி, தமிழ் வழியில் கல்வி கற்பதற்கான வசதிகளையும் இந்தப் பள்ளியில் ஏற்படுத்தினார். பாண்டுப் பகுதி மாணவர்கள் மட்டுமின்றி, அருகில் உள்ள அம்பர்நாத், உல்லாஸ் நகர், ஷாஹாட், அம்பிவிலி, மோனா பகுதியிலிருந்தும் மாணவர்கள் இந்தப் பள்ளியில் தமிழ் கற்று வருகின்றனர்.

1961-ஆம் ஆண்டு, மும்பையில் திருவள்ளுவர் மன்றத்தினை உருவாக்கி, மும்பையில் தமிழர்கள் மத்தியில் வள்ளுவரை தமிழர்களின் அடையாளமாக உயர்த்திப் பிடிக்க வைத்தவர். இந்த மன்றத்தின் சார்பாக, தலைவர் கலைஞர் அவர்களின் 'குறளோவியம்' நூலினை இந்தியில் மொழிபெயர்த்ததுடன், 1994-ஆம் ஆண்டு பீகார் மாநிலம், பாட்னாவில் அன்றைய பீகார் முதல்வர் லாலு பிரசாத் அவர்களைக் கொண்டு வெளியிட வைத்தவர்.

மும்பை புறநகர் கழகம் சார்பில், ஆண்டுதோறும் அண்ணா பிறந்த நாள், கலைஞர் பிறந்தநாள் விழா ஆகியவற்றை நடத்தி தமிழ் மக்களிடையே கழக உணர்வினை ஊட்டினார். கழக முன்னோடிகள் பலரையும் மும்பைக்கு அழைத்து வந்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர். குறிப்பாக, கழகக் கூட்டங்களுக்கு பள்ளியின் கதவுகளை எப்போதும் திறந்தே வைத்திருந்தார் தேவதாசன்.

### வள்ளுவர் சிலை

அவர் உருவாக்கிய மும்பை திருவள்ளுவர் மன்றத்தின் வளாகத்தில் திருவள்ளுவர் சிலையை நிறுவ வேண்டும் என்கிற நீண்ட நாள் கனவை 2017-ஆம் ஆண்டில் நிறைவேற்ற முனைந்தார். அதற்காக, சென்னையில் திருவள்ளுவர் சிலை தயாரிக்கப்பட்டு மும்பை கொண்டு வரப்பட்டது. 2017-ஆம் ஆண்டு செப்டம்பர் 2, அவரது பிறந்தநாள் அன்று, அந்தச் சிலையைத் திறந்து வைத்தவர் தமிழ்நாட்டின் அன்றைய எதிர்க்கட்சி தலைவர், இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

மும்பையில் தமிழர்களின் நலனுக்காக ஓடி ஓடி உழைத்தவர், வயது மூப்பு காரணமாக தனது பொதுவாழ்க்கைப் பணிகளை 2010-ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறைத்துக் கொண்டார். மும்பை புறநகர தி.மு.க.-வின் அவைத் தலைவராக இளைஞர்களை வழிநடத்தி வந்தார்.

பகுத்தறிவு நாத்திகக் கொள்கை மாறாமல் பயணித்த தேவதாசனுக்கு, 2018-ஆம் ஆண்டில், கழக முப்பெரும் விருதுகளில் **'பெரியார் விருது'** வழங்கி, பெருமை செய்தது கழகம்.

அதைத் தொடர்ந்து சில மாதங்களில் 2019-ஆம் ஆண்டு அவர் இயற்கை எய்தியபோது, மும்பை தமிழர்கள் அனைவரும் பெரும் சோகம் கொண்டனர். தலைமைக் கழகத்தின் சார்பில், கழகத்தின் செய்தித் தொடர்பாளரும், அன்றைய மாநிலங்களவை உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன் மும்பை சென்று அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். 'மும்பை தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு, தொடர்ந்து பணியாற்றி வந்தவர் வி.தேவதாசன்' என கழகத் தலைவரின் இரங்கல் அறிக்கை அவரது பெருமையைப் போற்றியது. தாய்நிலத்தை விட்டுப் பிரிந்தாலும், தமிழர்களின் பேரியக்கமான தி.மு.கழகத்தை வளர்த்த தேவதாசன் போன்றோர் அமைத்த அடித்தளம் என்றும் அவர்களது கனவுகளை நிறைவேற்றும்.

> **"தாய்நிலத்தை விட்டுப் பிரிந்தாலும், தமிழர்களின் பேரியக்கமான தி.மு.கழகத்தை வளர்த்த தேவதாசன் போன்றோர் அமைத்த அடித்தளம் என்றும் அவர்களது கனவுகளை நிறைவேற்றும்!"**

...துடிக்கும்

---

## டிரம்புக்கு பதில் தருமா பா.ஜ.க.?

'பா.ஜ.க.-வுடன் இனி எந்தக் காலகட்டத்திலும் கூட்டணி என்ற பேச்சுக்கே இடம் கிடையாது' என நாடாளுமன்றத் தேர்தலின்போது வீராவேசமாகப் பேசியவர் எடப்பாடி பழனிசாமி. ஆனால், எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ராமலிங்கம் வீட்டில் வருமான வரித்துறை ரெய்டு நடத்திய சில மாதங்களில், டெல்லிக்குச் சென்று பாதை மாறி மாறி, கார்களை மாற்றி மாற்றிச் சென்று அமித்ஷாவைச் சந்தித்தார். அடுத்த சில நாட்களில் அமித்ஷா சென்னைக்கு வந்து, 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணியை உறுதிசெய்துவிட்டுச் சென்றார். அ.தி.மு.க. என்றால், 'அமித்ஷா தி.மு.க.' என்றும் சொல்லும் அளவுக்கு அடிமை சாசனம் எழுதித் தந்துவிட்டார்கள் என்று அரசியல் தளங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

பா.ஜ.க.-வைக் கண்டு, அ.தி.மு.க. இப்படிப் பதறுகிறது என்றால், அமெரிக்க அதிபர் டிரம்பைக் கண்டு பா.ஜ.க. பதறிக் கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், மோசமான முன்னுதாரணமாக, இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போரை நிறுத்துவதாக டொனால்டு டிரம்ப் சில நாட்களுக்கு முன்பு அறிவித்தார். இதுகுறித்து, நாடாளுமன்றத்தைக் கூட்டி விவாதிக்க வேண்டுமென்று இந்தியா கூட்டணி வலியுறுத்திய போதிலும், வாய்திறக்க மறுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

"போரை நிறுத்துங்கள் இல்லாவிட்டால், இரு நாடுகளுடனும் வர்த்தக உறவைத் துண்டித்து விடுவேன் என்று எச்சரித்தேன், உடனே நிறுத்திவிட்டார்கள்" என்று இந்தியாவின் கண்ணியத்தைக் கேள்விக்குறியாக்கும் வார்த்தைகளை டிரம்ப் பயன்படுத்திய பிறகும் அமைதி காக்கிறார் மோடி. இந்நிலையில், தோஹா சென்ற அமெரிக்க அதிபர் டிரம்ப், அமெரிக்காவுடன் 'பூஜ்ய விகித வர்த்தகம்' செய்ய இந்தியா முன்மொழிந்திருப்பதாக தடாலடியாகக் கூறியிருக்கிறார்.

டிரம்பின் இத்தகைய தடாலடிப் பேச்சுக்களுக்குப் பதிலடி அல்ல, பதில் சொல்லவே தயங்குகிறது 56 அங்குல மார்பு கொண்டதாக வீண் சவடால் அடிக்கும் நரேந்திர மோடியின் பா.ஜ.க.

---

## ஃப்ளாஷ்பேக்


பவானி எஸ்.ஏ.அன்பழகன்

### மறக்க முடியாத நாள்!



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1986-ஆம் ஆண்டு, ஈரோடு பொதுக்கூட்டம் முடித்து விட்டு, ஓய்வெடுப்பதற்காக பவானி குமாரபாளையம் ஜே.கே.கே.பங்களாவிற்கு வருகை தந்தார்.அப்பொழுது நான் பவானி நகர இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்தேன். அந்நேரத்தில் பவானி நகரச் செயலாளராக இருந்த ப.சீ.கிருட்டிணசாமி அவர்கள் எங்களை அழைத்துச் சென்று தலைவர் கலைஞர் அவர்களிடம் அறிமுகம் செய்தார். நானும் எனது துணைவியார் மற்றும் குழந்தைகளுடன் சென்று வாழ்த்துப் பெற்றேன். அன்றைய நாள் என்றும் என் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகும்.

**- பவானி எஸ்.ஏ.அன்பழகன், அமைப்பாளர், மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி, ஈரோடு மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### மாவட்ட மாநாட்டில் மிச்சமான தொகை!

1958-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், தஞ்சை மாவட்ட தி.மு.க. 3-வது மாநாடு, திருவாரூரில் நடைபெற்றது. கே.ஏ.மதியழகன் தலைமை வகித்த மாநாட்டில், பேரறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர் மற்றும் கழக முன்னோடிகள் பலரும் சிறப்புரையாற்றினர். கலைஞரின் உதயசூரியன் நாடகமும், நாகூர் அனீபா, மன்னை சுந்தரேசன் ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. மாவட்ட மாநாட்டில் அதிகத் தொகையை, முதன்முதலாக மிச்சப்படுத்திக் காட்டினார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131